# “ புரட்சிகரமானது வத்திக்கான் சங்கம் ”

“காத்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்”

காவலன்

தந்தி: “கதலிக்பிறஸ்” யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

93-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ௵ மாசி ௴ 3-ந் உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 5-ம் இல.

ஆங்கிலநாட்டு மகா மேற்றிராசனமாகிய வெஸ்மினிஸ்டர் பிரிவின் துணை ஆயர் பட்லர் அடிகளார் அங்கு அண்மையில் ஆற்றிய பிரசங்கமொன்றில் வத்திக்கான் சங்கத்தின் புரட்சிகரமான தன்மையை மிகத் தெளிவாக விளக்கிப்பேசினர். ‘‘அச்சங்கத்தின் முடிவுகள் திருச்சபையில் பலதுறைகளிலும் பெரும் புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்றன: வழிபாட்டுமுறைகளில் ஏற்பட்டிருக்கும் புரட்சிகரமான மாற்றங்களைச் சிறுபிள்ளைகளும் விளங்கிக்கொள்கின்றனர். இக்காலத்துக்கு அவசியமான மாற்றங்களை ஏற்படுத்த வத்திக்கான் சங்கத்தைக் கூட்டுகின்றோம் என 23-ம் அருளப்ப பாப்பரசர் கூறியதன் உண்மையை இன்று யாவரும் உணர்ந்துகொள்கின்றனர். இப்புரட்சியினால் நாம் நிறைந்த பயனடைய இல்லற கத்தோலிக்கர்களின் ஒத்துழைப்பு அவசியம். இல்லற கத்தோலிக்கரின் நிலைமையிலும் ஒரு புரட்சியைச் சங்கம் ஏற்படுத்தியிருக்கின்றது: ஆளப்படும் திருச்சபை என அழைக்கப்படும் இல்லறத்தோருக்கு ஆளும் திருச்சபையுடன் சமநிலை அளிக்கப்பட்டிருப்பதே இப்புரட்சி. ஆகவே, இந்நிலைமையை உணர்ந்து இல்லற கத்தோலிக்கர்யாவரும் திருச்சபையின் முன்னேற்றத்துக்கு ஆகவேண்டியவற்றைச் செய்ய முன்வருவார்களாக” என்றார் மேற்றிராணியார்.

# பாப்பரசர்–ஜனாதிபதி ஜோன்சன் சம்பாஷணைக் குறிப்புகள்

மார்கழிமாதம் 23-ம்திகதி அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் வத்திக்கானுக்குச்சென்று பாப்பரசர் 6-வது சின்னப்பரைத் தரிசித்தாரல்லவா? அதுபற்றிய முக்கியகுறிப்புகளை திரு. ஜோன்சன் வெளியிட்டிருக்கின்றார்.

○ அமெரிக்க அரசாங்கம் வியற்னாமில் சமாதானத்துக்கு வழிவகுக்க உண்மையானமனம் உடையதாக இருக்கின்றதுஎன பாப்பரசர் சின்னப்பருக்குநேரில் அறிவிக்க விரும்பியே அங்குசென்றோம்.

○ சமாதானம் காண்பதில் முன் ஏற்பட்டுள்ள ஏமாற்றங்கள் பல இருப்பினும், சமாதானத்துக்கு மேலும் வழிகாண முயற்சிப்பதை இந்த ஏமாற்றங்கள் தடுக்கமாட்டாஎன வாக்குப்பண்ணுகின்றோம்.

சமாதானம் வியற்னாமில் நிலவ தம்மாலான உதவியாவற்றையும்புரிய ஆவல்கொண்டவராய் பாப்பரசர் சின்னப்பர் இருக்கக்கண்டோம்.

○ வியற்னாம் மக்கள் ஒருவரோடொருவர் அன்னியோன்னியமாய்வாழ நாம் செய்யக்கூடியனவற்றைப் பாப்பரசருக்கு எடுத்துக்காட்டினோம்.

○ வடவியற்னாமில் யுத்தகைதிகளாக இருப்பவர்களை மனிதாபிமான உரிமைகளுடன் அங்கிருக்கச்செய்ய உதவிபுரியுமாறு பாப்பரசரைக் கேட்டுக்கொண்டோம்.

○ பாப்பரசர் விரும்பிய எந்தக் கோஷ்டியையும் தென்வியற்னாமுக்கு அனுப்பி அங்கு வடவியற்னாம், வியற்கோங் கைதிகள் சீவித்துவரும் முறையைப் பரிசிலனைசெய்து வடவியற்னாமியருக்கு அறிவிக்க பாப்பரசரைக் கேட்டுக்கொண்டோம்,

## கொமியூனிஸ்த பிரதமர் ஸ்பிற்யக் வத்திக்கான் சென்றார்

சென்றமாதம் பரிசுத்த தந்தை கொமியூனிஸ்த நாடாகிய யூகோசிலேவியா கருதினல் செப்பர் அடிகளை வத்திக்கானில் ஒரு பெரும் பதவியில் அமர்த்தி அந்நாட்டையும் மகிமைப்படுத்தியுள்ளார். அதன்பின் இருதேசங்களுக்கும் இடையில் உள்ள தொடர்பு முன்னேற்றம் அடைந்துவருகின்றது. சென்றவாரம் அந்நாட்டுப் பிரதமர் ஸ்பிற்யக் அவர்கள் இத்தாலிதேசத்துக்கு விஜயம் செய்தபோது பாப்பரசரையும் தரிசித்துக்கொண்டார். அத்தருணத்தில் இருவரும் மறுகருமங்களுடன் வியற்னாம் தேசத்தில் சமாதானத்தைப்பற்றி ஆலோசித்துக்கொண்டனர். பாப்பரசர் உலகசமாதானத்துக்காக உழைத்துவரும் பான்மையைப் பிரதமர் பத்திரிகை நிருபர்களுக்குப் புகழ்ந்து பாராட்டினர்.

## இரட்சணிய சபைத் தலைவரின் ஒத்துழைப்பு வாக்குறுதி

“நாம் சகல கிறீஸ்தவ சபைகளுடனும் சகல விதத்திலும் ஒத்துழைக்க என்றும் தயாராக இருக்கின்றோம்; பிறமதத்தவர்களில் பிழை பிடியாதிருப்பது எமது சமயத்தவர்களின் கோட்பாடுகளில் ஒன்று. எனினும், சகல கிறிஸ்தவசபைகளும் ஒன்றுபடும் நாள் இன்னும் அண்மையில் வரவில்லை என்று நாம் கருதுகின்றோம்”. இவ்வாறு சர்வதேச இரட்சணியசபைத் தலைவர் பிறடறிக் கூட்ஸ் என்பவர் பம்பாய் நகரில் அன்று கூறினர். ஒருமாதகாலமாக இந்தியநாட்டில் தங்கிப் பல இடங்களிலும் அந்நாட்டில் நடக்கும் இரட்சணியசேனையாரின் வேலைகளை நேரிற் பார்த்துப் போக வந்துள்ளார் ஜெனறல் கூட்ஸ் அவர்கள்.

# மெதடிஸ்ற் சபைத் தலைவர்கள் பாப்பரசரைத் தரிசித்தனர்

இங்கிலாந்துதேச மெதடிஸ்ற் சபைத்தலைவர்கள் மூவர் சென்றவாரம் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரைத் தரிசித்தனர். அவர்கள் முறையே டக்டர் டேவிட்சன், எறிக் பேக்கர் அடிகளார், டக்டர் ஹறல்ட் றொடெட்ஸ் என்பவர்களே. டக்டர் டேவிட்சன் 23ஆம் அருளப்ப பாப்பரசரையும் தரிசித்திருக்கின்றார். இவர் மெதடிஸ்ற் சபையில அக்கிராசனர் வகுப்பைச்சேர்ந்தவர். வத்திக்கானுக்குப் பிரித்தானியாவிலிருந்து சமூகம்கொடுத்த முதல் அக்கிராசனர் இவரே. இவரது விஜயம் ஒரு புதிய உறவை உண்டாக்கித் தற்போது வத்திக்கானுக்கும் ஆங்கில மெதடிஸ்ற் சபையினருக்குமிடையில் நடந்துவரும் பேச்சுவார்த்தைகளுக்கு அடிகோலியது.

# பிலிப்பைன்ஸ் தீவில் ஒருபுதிய சமூக இயக்கம்

பிலிப்பைன்ஸ்தீவில் பெரும்பாலானோர் கத்தோலிக்கர்: இவர்களிடையே ஒரு புதிய சமூக இயக்கம் தோன்றி இருக்கின்றது: இதற்குத் தலைமை வகிப்பவர் சமீபகாலத்தில் செனற்றர் பதவியிலிருந்து நீங்கிக்கொண்டவர். அவர் பெயர் மங்லப்பஸ் என்பதே. மக்சேசே ஜனாதிபதியின் காலத்தில் இவர் அவரது வெளிவிவகாரக் காரியதரிசியாகக் கடமையாற்றியவர். மங்லப்பஸ் அவர்கள் தமது சமூக இயக்கத்தைப் 13-ம் சிங்கராய பாப்பரசரினதும், 6-வது சின்னப்ப பாப்பரசரினதும் சமூக நிருபங்களின் அடிப்படையில் நிறுவி வருகின்றார். 2–ம் வத்திக்கான் சங்க முடிவுகளில் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றார் இவர். இவரது இயக்கம் மத்திய. வகுப்பினரிடையேயும் மார்க்சீஸ் வாதிகளினால் ஏமாற்றமடையாத வறிய மக்களினிடையேயும் பரவி வருகின்றது. பழைய போக்கின் பிழைகளை உணர்ந்த பல தனவந்தர்களும் இவரை உற்சாகப்படுத்தி வருகின்றனர். பிலிப்பைன்ஸ் தீவின் எதிர்கால சரித்திரத்தில் மங்கலப்பஸ் ஒருபிரதான இடத்தைப் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றார்.

## பூகம்ப அகதிகளுக்கு பாப்பரசரின் தானம்

சிசிலிதீவில் நடந்த பயங்கர பூகம்ப விபத்துகளைப் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர் கேள்விப்பட்டதும் உடனடியாகப் பாப்பரசரின் தான உதவி அதிபராகிய பிறஸ்சி அடிகளாரை அங்கு அல்லற்படும் மக்களுக்குத் தம்மால்கூடிய பண உதவி, பொருள் உதவிசெய்ய அனுப்பிவைத்திருக்கின்றார். சிசிலியில் பல பாகங்கள் பூகம்பத்தில் முற்றாக அழிக்கப்பட்டன என்றும், பெஜிலீனை என்னும் கிராமத்துக்கு இரண்டரை மைல் தூரத்துக்கு மோட்டோர் இரதங்கள் செல்லமுடியாது இருக்கிறது என்றும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

# குஷ்டரோகிகள் தினம் தை—28

சென்ற 15 வருடகாலமாக வருடாவருடம் கொண்டாடப்படும் குஷ்டரோகிகள் தினமானது இவ்வருடம் தைமாதம் 28-ந் திகதி கொண்டாடப்பட்டது. இவ்வருட வைபவத்தின் சிறப்புகளில் ஒன்று என்னவெனில் பல இடங்களிலும் புறொட்டஸ்தாந்து மதத்தினரும் வேறுபல கிறிஸ்தவ சபையினரும் கத்தோலிக்கருடன் ஒன்றுசேர்ந்து இத்தினத்தைக் கொண்டாடியதே. இன்று இவ்வுலகத்திலுள்ள 15 கோடி குஷ்டரோகிகளினது துயரத்தைக் குறைப்பதற்கு வழிவகைகள் அன்று ஆராயப்பட்டன. பலவருடகாலமாக குஷ்டரோகிகள் சேவையில் கத்தோலிக்க திருச்சபை ஈடுபட்டுவந்துள்ளது. இச்சேவையில் மறுகிறிஸ்தவ சபைகளுடன் ஒத்துழைப்புக் கிடைத்திருப்பது இவ்வியாதிஸ்தர்களுக்குப் பெரிதும் நன்மை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. அன்றுதினம் நடந்த வைபவங்களில் குஷ்டரோகிகளுக்கு அருஞ்சேவைசெய்து தமது உயிரையே அர்ப்பணம் செய்த டேமியன் அடிகளாருக்கு யாவரும் நன்றி பாராட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### மாசி மாதம் — 1968

| | | | |
|---|---|---|---|
| 4 | ஞா. | லங்காமாதா திருவிழா | [வெ] |
| 5 | தி. | அர்ச். ஆகத்தம்மாள் | [சி] |
| 6 | செ. | அர்ச். தீத்துஸ் | [வெ] |
| 7, | பு. | அ. ரோமுவால்துஸ் | [வெ] |
| 8 | வி. | அ. மார்த்தா அருளப். | [வெ] |
| 9 | வெ. | அர்ச். சிரில் | [வெ] |
| 10 | ச. | அ. ஸ்கொலாஸ்திக்கம். | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

1968-ம்ஞு மீ மாசி 3-ந்வ


## மெய்யான தேசபக்தி

நமது நாட்டின் தேசிய தினத்தைக் குதூகலமாகக் கொண்டாடும் இவ்வேளையில் இலங்கை வாழ் மக்கள் அனைவரின் உள்ளங்களிலும் பெருமிதமும் தேசிய உணர்ச்சியும் பெருக்கெடுப்பது இயல்பு. அத்தகைய உணர்ச்சி ஒருவனிடம் இல்லாவிட்டால் அவன் வெறும் நடைப்பிணமாவான் என்று கவிஞர் உவால்டர் ஸ்கொட் கூறுகின்றார். தேசிய உணர்ச்சியானது ஒருநாள் ஆடல் பாடலுடன் முடிந்துவிடுவதில்லை. ஒருவனது வாழ்க்கையிலும் இரத்தத்திலும் ஊறியிருந்தால், அவனது செயல்கள் ஒவ்வொன்றும் தேச நலனுக்கு இடையூறு விளைவிக்காததாக மட்டுமல்ல, அதற்குத் துணைபுரிவதாகவும் அமையும். ஒரு கிறிஸ்தவன் தன் நாட்டின்மட்டில் தனக்குள்ள கடமைகளை நிறைவேற்றும் விதம் ஏனையோருக்கு வழிகாட்டுவதாக அமைய வேண்டும்.

உண்மையான தேசபக்தி எது என்பதற்கு எடுத்துக்காட்டாக உலகில் சுட்டிக் காட்டக்கூடியது ஒன்றுமேயில்லை. ஏனெனில் அது பெரும்பாலும் வெறும் கற்பனை உருவமாக, வேறொன்றை மறைக்கப் போடும் போலி வேடமாக இருக்கிறது. சில சமயங்களில் மெய்யான தேசிய உணர்ச்சி இருந்தபோதிலும் அது பூரணமானதாக இருப்பதில்லை. ஏனெனில் அது வெறுப்பினால் தூண்டப்பட்டதாயிருக்கிறது. தன் நாட்டில் கொண்ட குறுகியபற்று பிறநாட்டவர்மேல் வெறுப்பை வளர்க்குமானால் அதைச் சிறந்ததென்று கொள்ளமுடியாது. மெய்யான தேசபக்தி அன்பை அடிப்படையாகக் கொண்டிருத்தல்வேண்டும். அன்புள்ளவனே தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக, நாட்டுமக்கள் நலங்கருதி உழைப்பவனாக இருப்பான். மனிதர் எல்லாரையும் நேசிக்க வேண்டுமென்றிருந்தாலும், தன்னோடு நெருங்கிய தொடர்புள்ள தன் நாட்டவர்கள் மட்டில் ஒருவனுக்கு அதிகப்படியான கடமைகள் உண்டு. தன் நாட்டை இன்னும் வளம்பொருந்தியதாக, மகிழ்ச்சிகரமானதாக, செல்வமும் அழகும் உள்ளதாக, அறிவும், ஒழுக்கமும் நிறைந்ததாக ஆக்கவேண்டியது அவன் கடமை. சில வருடங்களின்முன் காலஞ்சென்ற ஜனாதிபதி கென்னடி தன் நாட்டுமக்களுக்கு விடுத்த செய்தியில், "உனது நாடு உனக்காக என்ன செய்யப்போகிறது எனக் காத்திராதே. உனது நாட்டுக்காக நீ என்ன செய்யக்கூடும் என்று பார்" எனக் கூறியிருக்கிறார். தனது நாடு குறைபாடுகள் மலிந்ததாக இருக்கலாம். ஆனால் அக்குறைபாடுகளை நீக்குவது அந்நாட்டினர் கடமை அல்லவா?

இன்றைய அரசியல் முறையில் மனிதன் இத்தகைய ஒரு குறிக்கோளுடன் வாழா விட்டால் அவன் ஒரு செயலற்ற இயந்திரமாக மாற ஏதுவாகிறது. ஏனெனில் அரசாங்கத்தின் வேலைகள் வரவர விரிவடைந்து கொண்டே வருகின்றன. தனிமனிதன் தன் சுதந்தரத்தின் பெரும்பகுதியை அரசாங்கத்தின் கையிலோ, வேறு சங்கங்களின் கையிலோ ஒப்படைத்துவிட்டு குறுகிய வாழ்வு வாழ்வதில் திருப்தியடைகிறான். தன்னுடைய சகல தேவைகளையும் பூர்த்திசெய்வது அரசாங்கத்தின் பொறுப்பு, தன் சொந்த முயற்சியால் ஆகவேண்டியது ஒன்றுமில்லை என்னும் பொய்யான ஒரு மயக்கத்தில் மூழ்கியிருக்கிறான். தனிமனிதன் தன் அக்கறையின்மையால் தீங்குகளை வளரவிடும்போது அரசாங்கம் குறுக்கிட்டு அவற்றை நீக்கவேண்டியிருக்கிறது ஆனால் சட்டதிட்டங்களால் மட்டும் ஒழுங்குபடுத்தமுடியாத எத்தனையோ காரியங்களிருக்கின்றன. மக்கள் தம் பொறுப்பையுணர்ந்து நடந்து கொண்டால் தம் சொந்த முயற்சியால் நாட்டைச் சீர்ப்படுத்த முடியும். தமது உரிமைகளை அரசாங்கத்திற்கு விட்டுக்கொடுக்க வேண்டியும் வராது.

# ஏன் இந்தப் பாடுகள்? ஏன் இவ்வளவு கண்ணீர்?

கருணாசமுத்திரமாகிய கடவுள் ஆதி மக்களை ஒரு பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்தில் சிருஷ்டித்தார். ஆனால், மனுக்குலத்துக்குச் சொந்தமான இந்நிலையை எமது ஆதித்தாய் தகப்பன் கட்டிக்கொண்ட தங்கள் பாவத்தின் நிமித்தம் இழந்தார்கள். இதன் பயனாகவே இவ்வுலகில் மக்களுக்கு வியாதி வருத்தங்களும், சாவு நோவுகளும் ஏற்பட்டனவென்று வேதாகமத்தில் (ஆதியாகமத்தில்) நாம் வாசிக்கிறோம். உண்மையாகவே உலகிற் பிறந்த ஒவ்வொருவரும் அவர் பிறந்த நாட்தொட்டு இறக்கும் வரையும் பாடுபட்டே வாழவேண்டியிருக்கிறார். தனது நாளாந்த தொழிலைச் செய்பவர்—அது கமத்தொழிலாயிருந்தாலென்ன கடற்தொழிலாயிருந்தாலென்ன—"நெற்றிவியர்வை நிலத்திற்சிந்தி" காலைதொட்டு மாலைமட்டும் தன் கடமையைச் செய்யவேண்டியவராயிருக்கிறார். இவர்களைப்போலவே ஏனைய தொழிலாளிகளும் தத்தம் வேலைகளைக் கஷ்டத்துடனேயே செய்யவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இவ்வாறு எல்லோரும் தத்தம் கடமைகளைச் செய்யாவிடில் உலகில் மக்கள் வாழமுடியாத நிலையே ஏற்படும். இதனையிட்டே அர்ச். சின்னப்பரும் "உழைபாதவன் உண்ண அருகதையற்றவன்" என்று தமது நிருபமொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆண்களைப்போலவே உலகில்வாழும் பெண்களும் பலபாடுகள் பட்டுத் தங்கள் தனயர்களை ஈன்றெடுக்கின்றனர். தங்கள் நாளாந்த வீட்டுவேலைகளையும் வெளிவேலைகளையும் பலவித கஷ்டங்களின் மத்தியில் செய்துவாழவேண்டியவர்களாயிருக்கின்றனர்.

பி. சவரிமுத்து

இவ்வாறு மக்கள்படும்பாடுகளை இரு பெரும் பிரிவுகளாக வகுத்துக்கூறலாம். ஒன்று உலகில் நாம் அனுபவிக்கும் நோய், வருத்தம் போன்ற சரீரக் கஷ்டங்கள். மற்றையது, மக்களுக்கு மனதில் ஏற்படும் "மனவருத்தம" என்று பொதுவாகக் கூறப்படும் கவலைகள் எனலாம். தமிழ்க்கவிஞர் கம்பர் "மனக்கவலையின் தன்மையைவிளக்கும் நோக்கத்துடன் "கடன்பட்டார் நெஞ்சம் போலக் **கலங்கினான்** இலங்கைவேந்தன்" என்று விளக்கியிருக்கிறார்.

எமது இரட்சகருக்கு ஏற்பட்ட மனக் கவலைகாரணமாக அவருடைய வியர்வை இரத்தமாக மாறியது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

உலகியற்துறையில் நாம் ஓர் உன்னத நிலையை அடையவேண்டுமாயின் நாம் பலவித இன்னல்களை அனுபவித்தே தீரவேண்டுமென்று யாவரும் நன்கறிவர். ஒரு தமிழ்ப்புலவரும் "கண் துஞ்சார், பசிநோக்கார் ... கருமமே கண்ணாயினார்" என்று சிறப்பாகப் பாடியிருக்கிறார்.

ஆனால், கிறிஸ்தவ சமயத்துறையில் பாடுகளும் கண்ணீரும் எங்கள் வாழ்க்கையின் பங்காகவே இருக்கின்றன என்பதை நாம் மறத்தலாகாது. எமது திவ்விய இரட்சகரின் பூவுலக வாழ்க்கையை நாம் உற்று நோக்கின் அது துன்பதுயரங்கள் நிறைந்ததொன்றாகவே காட்சி அளிக்கின்றது. விசேஷமாக அவருடைய பகிரங்க வாழ்க்கையும் திருப்பாடுகளும் இவ்வுண்மையையெடுத்து நன்கு விளக்குகின்றன. அவருடைய போதனைகளை அனுசரித்து அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழும் நாமும் எமக்குவரும் துன்பதுரிதங்களையும் கஷ்டநஷ்டங்களையும் நல்லமனதோடு சகித்துவாழவேண்டியவர்களாயிருக்கிறோம். எனவே மக்களாகப்பிறந்த நாம் பாடுகளை அனுபவிப்பது எங்கள் சுபாவத்தின் ஒரு தவிர்க்கமுடியாத கடமையாக இருக்கிறது. நாம் விரும்பினாலென்ன விரும்பாவிடிலென்ன பாடுகளை நாம் அனுபவித்தே தீரவேண்டும். என்றாலும் எமக்குவரும் பாடுகளை நாம் நல்ல மனதோடு ஏற்று அவற்றைத் தேவசித்தத்திற்கியைந்த முறையில் நாம் அனுபவிப்போமாயின் அவற்றால் எமக்கு அளவற்ற நன்மையே ஏற்படும். ஏனெனில், நாம் நல்லமனதோடு பாடுகளை அனுபவிக்கும்போது எமதாண்டவராகிய யேசுக்கிறிஸ்துநாதரையே பின்பற்றுகிறோம். "எசமானில ஊழியன் பெரியவனு" அதுவே பரிசுத்ததனத்தின் வழியாகவும் இருக்கிறது. நிச்சயமாகவே எவ்வளவுக்கு அவரைப் பின்பற்றி அவருடைய முன்மாதிரியைக் கடைப்பிடித்து அவர் அனுசரித்த புண்ணியங்களை நாமும் புரிந்து வருகிறோமோ, அவ்வளவுக்கு நாமும் புனிதமடைவோம். இதையிட்டே "பாடின்றிப் பட்டமில்லை", "பூவுலகக் குருசின்றிப் பரலோகக் கிரீடமில்லை", இவ்வுலகச் சிலுவையின்றி விண்ணுலகச் சிம்மாசனம் இல்லை" என்று ஒரு ஞானி கூறியிருக்கிறார்.

பாடுகளால் ஏற்படும் இரண்டாவது பயன் எங்கள் பாவங்களுக்குப் பரிகாரமாக அவை அமைவதே. உலையிடப்பட்ட பொன் தூய்மையாவது போலவும், நெருப்பிற் காய்ச்சப்பட்ட பால் சுவையில் அதிகரிப்பதுபோலவும் பாடுகளால் நிரம்பிய ஆத்துமம் பரிசுத்தமாக்கப்படுகிறது எனலாம்.

பாடுகளின்மூலமே நாம் பரகதியையும் அடைய முடியுமென்பதும் வேறோர் உண்மையாக இருக்கிறது. திருப்பாடுகளின்பின் எமது இரட்சகருக்குப் பெரிய வெள்ளிக்கிழமையன்று ஏற்பட்ட மரணமானது உயிர்த்த திருநாள் மகிமோற்சவத்துக்கு ஒரு முன்னோடியாக இருந்தது. அதுபோலவே எங்கள் பேரானந்தமோட்சசம்பாவனைக்கு ஒரு முன்னோடியாக எமது துன்பதுரிதங்கள், துக்கதுயரங்கள், கண்ணீர்கள், பெருமூச்சுகள் ஆதியன இருக்கின்றன என்பதை நாம் மறத்தலாகாது. எவ்வளவுக்குத் துன்பதுரிதங்களை நாம் நல்லமனதோடு ஏற்று அவற்றைச் சாந்தமனதுடன் அனுபவிக்கிறோமோ அவ்வளவுக்கு எங்கள்மோட்ச சமபாவனை ஆனந்தம் நிரம்பியதாக அமையும்.

ஈற்றில் எமது இரட்சகர் எவ்வாறு தமது பாடுகள்மூலம் உலகமக்களை மீட்டாரோ அதுபோலவே நாமும் எங்கள் பாடுகளின்மூலம் பாவிகளின் மனந்திரும்புதலுக்கும், அவர்கள் பரலோகத்தை அடைவதற்குமே உறுதுணை புரியமுடிகிறது. ஆத்துமாக்கள் கிறிஸ்துநாதருடைய சிலுவையால் மாத்திரமன்றி, கிறிஸ்தவர்களின் சிலுவைகளாலும் இரட்சிக்கப்படுகின்றன. இதையே கருதினால் பீயா தமது சொற்பொழிவொன்றில் "தேவன் எம்மைச் சிருஷ்டித்தது அவரை நாம் அறிந்து நேசித்துச் சேவித்து மோட்சகதியை அடையமட்டுமன்றி மற்றவர்களும் அவ்வாறே செய்யப்பண்ண" என்று கூறியிருக்கிறார். நாமறிந்த வழிவகைகளிலே நல்மனதோடு நமக்குவரும் பாடுகளை நாம் அனுபவிப்பதிலும் மேலான புண்ணியங்கள் இவ்வுலகில் இல்லை என்று சுருக்கமாகக் கூறிமுடிக்கலாம்.

## நினைவூட்டுகிறோம்!

பாதுகாவலனுக்கான 1968-ம் ஆண்டுச் சந்தாவை அனுப்பிவிட்டீர்களா?

இல்லையெனில், அச்சந்தாவையும், முன்நிலுவை இருந்தால் அதனையும் கீழ்க்காணும் முகவரிக்குத் தாமதமின்றி அனுப்பி வைக்குமாறு பணிவாக வேண்டுகின்றோம்.

**வருடசந்தா ரூபா 9/=**

நிர்வாக ஆசிரியர்,
சத்தியவேத பாதுகாவலன்,
மேற்றிராசன இல்லம், யாழ்ப்பாணம்.

## பிரிந்து விளங்கும் திருச்சபையை உலகம் ஏற்றுக்கொள்ள மாட்டாது

கொழும்பு மேற்றிராணியார் ஹறல்ட் டி சொயிசா அடிகளார் அன்று புனித பப்டிஸற் தேவாலயத்தில் ஒற்றுமை வாரத்தில் பிரசங்கிக்கும்போது, "உலகமானது பிரிந்து விளங்கும் திருச்சபையிடமிருந்து கிறீஸ்துநாதரின் போதனைகளை ஏற்றுக்கொள்ள மாட்டாது. ஆகவே, அவரது போதனைகளாகிய சமாதானம், பிறர்சிநேகம் முதலியவற்றை ஒற்றுமைப்பட்ட திருச்சபையின் வாயின்மூலம் பெற உலகம் காத்திருக்கின்றது" என்றார் அடிகளார். டி சொயிசா அடிகளாரும், வேறு பல கிறீஸ்தவ சபைத் தலைவர்களும் தை மாதம் 25-ம்திகதி புனித லூசியா மகா தேவாலயத்தில் நடந்த ஒற்றுமை வைபவத்திலும் கலந்து கொண்டதை நேயர்கள் அறிவர். "இவ்வாறு வருடம் ஒருமுறையல்ல, பலநாட்களும் நாம் ஒன்றித்துப் பிரார்த்தித்துக்கொள்ள வேண்டும்" என்று அன்று கேட்டுக்கொண்டார் கருதினால் கூறே அடிகள்.

● வைத்திய அறிவு துரிதமாக அதிகரித்துவரும் காரணமாக 2000 ஆம் ஆண்டளவிலே மனிதனின் சராசரி வாழ்க்கையின்காலம் நூறுவயதாக நீடித்திருக்குமென்று டக்ரர்மோரிஸ் செய்னர்என்ற பிரபல அமெரிக்கடக்ரர் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசாலை இலுப்பை மரம் பேசுகின்றது

என்னைத் தெரியாத பேசாலை மக்கள் யாருமே இல்லை. 100 வருடங்களுக்கு மேலாக நிலைத்து நின்று செல்வாக்கடைபவன் யான். வெள்ளப் பெருக்கு, சூறாவளி, கடற்கொந்தளிப்பு எதுவும் என்னை அசைக்கவே இல்லை.

நான் அறிந்த மட்டில் பேசாலை மக்கள் வரவேற்று மகிழும் பண்பு மிகுந்தவர்கள். வரும் விருந்தினர் யாவரும் என் நிழலின்கீழ்த்தான் உபசரிக்கப்படுவார்கள். இதனால் நான் அடைந்துள்ள பெருமை கொஞ்சமல்ல.

கடந்த 27-ந்திகதி சனிவாரம் சாயந்தரம் 5-30 மணியளவில் நான் அடைந்த மகிழ்ச்சியும், பெருமையும் எல்லையை மீறிவிட்டது. காரணம் திருமலைத் துணை ஆயர் மகா. வந். வ். தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் எனக்குக்கீழ் வரவேற்கப்பட்டமையே.

என் கண்களை அகல விரித்து அருள் தங்கும் வதனத்தோடும், அலங்கார ரூபத்தோடும் வந்து இறங்கிய ஆயர் அவர்களை அஞ்பொழுகப் பார்த்துப் பார்த்து உள்ளம் பூரித்தேன். ஒரு பெரியார், அவர்களுக்கு மாலையணிந்தார், ஆயிரக்கணக்கான மக்களும், பல குருமாரும் அணிவகுக்க, பான்ட் இசை முழங்க அலங்கரிக்கப்பெற்ற தெருவூடே அன்புத் தந்தையை அழைத்துச் சென்றார்கள். அட பாவிகளே! இன்னும் கொஞ்சம் தாமதித்து அழைத்துச் செல்லக்கூடாதா என்று ஏங்கினது என் நெஞ்சம். நானும் உணர்ச்சி வேகத்தில் பின்தொடர நினைத்தேன். ஆனால், அசைய முடியவில்லை.

பான்ட் வாத்தியம் காதில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றது. ஆலய மணிகள் ஆர்ப்பரிக்க ஆண்டகையவர்கள் சேதிமம் சென்றுவிட்டார்கள். ஒலிபெருக்கிமூலம் ஒவ்வோர் செய்தியையும் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்.

நற்கருணை ஆசீர்வாதம் நடந்து முடிந்தது. அருகில் அமைந்துள்ள திறந்த வெளியரங்கில் ஆயர் அவர்கட்கு வரவேற்பு உபசாரம் நடந்தது. இனிமையான பாடல்கள், இதமான வாழ்த்திதழ், கருத்தமைந்த உபந்நியாசம் எல்லாம் ஒலிபெருக்கி மூலம் என் காது குளிரக் கேட்டேன். என்ன செய்வது? நேரடியாகச் சென்று அக்காட்சிகளைக் காணமுடியாத முடமாகி விட்டேனேயென்று என்னையே நொந்துகொண்டேன்.

ஆயர் அவர்கள் அன்புரை கூறி, ஆசி வழங்கினார்கள். மாணவ மாணவிகளின் பாடலும், ஆடலும் இன்பத்தை ஊட்டின. விளையாட்டு மன்றத்தினரால் வில்லுப்பாட்டின் மூலம் ஆயர் அவர்களைப் பாராட்டிக் கூறுவதைக் கேட்டு என் உள்ளம் மகிழ்ந்தது.

அடுத்தநாள் ஞாயிறுவாரம் வந். ஆண்டகையவர்கள் 4000-க்கு அதிகமான சிறுவர் சிறுமியர்க்கு உறுதிப்பூசுதலும், முதல் நன்மையும் கொடுத்துத் திவ்வியபலிப் பூசையையும் நிறைவேற்றினார்கள்.

'அன்று சாயந்தரம் மக்கள் அணிவகுத்துச் செபமாலை செபித்துக் கடற்கரைக்குச் செல்ல ஆண்டவர் அவர்கள் எழுந்து வந்து தமது அருட்கரத்தால் கடலை ஆசீர்வதித்தார்கள்' என்ற செய்தி அடுத்தநாள் என் நிழலின்கீழ் இருந்து வலையைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்த இளைஞர் மூலம் அறியவந்தேன்.

இந்த அருளின் செல்வத்தந்தையை நான் என் கண்குளிரக் கண்டு மகிழ்வில்லையே என்றுதான் இன்னும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். ஆனாலும், திருமலைக்குத் திரும்பிப் போகும்போது என் வழியாலேதான் போகவேண்டும்! அப்போது என் கவலையைத் தீர்த்துக் கொள்ளுவேன் என்று ஆறுதல் அடைந்து, அவர்கள் மீளும் சமயத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன்.

— அ. செபஸ்தியான் குரூஸ்

# "வந்தனைக்குரிய யோசவ்வாஸ் முனிவரின் புனித பட்டத்துக்கு முட்டுக்கட்டை"

### என்று அபயக்குரல் எழுப்புகிறார் உரோமைநகர் அலுவலர்.

ஒல்லாந்தரின் கலாபனைகாலத்திலே ஈழத்தின் வேதசோதியாய் விளங்கிய யோசவ்வாஸ் முனிவருக்கு அர்ச்சியர் பட்டங் கட்டும் முயற்சி ஆபத்திலிருப்பதாக, றோமைநகர் அலுவலரான கார்லோ கஸ்பரி அடிகள் கொழும்பிலுள்ள யோசவ்வாஸ் அலுவலகத்துக்கு 12-1-68 இல் அனுப்பிய அறிக்கையிலே குறிப்பிடுகிறார்.

இரு இன்னல்கள் நம்முன் தோன்றியிருக்கின்றன. முதல் யோசவ்வாஸ் முனிவர் சீவித்த காலத்தின் சரித்திர, பூமிசாஸ்திர, அரசியல், சமய நிலைபரம், மக்களின் மனோபாவம் போன்ற விஷயங்கள் நமது அனுபவத்துக்குத் தூரமாய்விட்டன. அவருடைய சீவிய சம்பவங்களின் குறிப்புகள் போர்த்துக்கீச, ஒல்லாந்த, ஆங்கில பாஷைகளிலே பரந்துகிடக்கின்றன. இவற்றினின்று யோசவ்வாஸ் முனிவரின் புனித வாழ்க்கையின் விழுமிய வளத்தை வெளிப்படையாக விளக்கும் ஒரு வரலாற்றை வரைவது சிரம சங்கடந்தான். ஆதலாலன்றோ அவ்வேலைக்குத் தெரியப்பட்ட வரலாற்று வல்லுனர் மூன்று மாதமட்டில் ஏடுகளைப் புரட்டிப்படித்தபின் கஷ்டங்களைக் கண்டதும் கௌரவத்தோடு விலகிக்கொண்டார். காலம் கழிந்ததும், பணம் செலவானதுமே கண்ட பலன்.

அடுத்து, பணமுடை பெரிய இடறலாயிருக்கிறது. வேறோர் ஆராய்ச்சியாளரைத் தேடவும் இதுவே தடையாயிருக்கிறது. இப்போது இருப்பிலுள்ளது ரூபா மூவாயிரம் மாத்திரமே. இது ஒரு நிபுணருக்கு வேதனம் வழங்க மூன்று மாதத்துக்கே போதும். எனவே, பணநிலைபரம் மாறாதுபோனால் முன்னேறமுடியாது. நமது நாட்டின் புனித போதகரின் புகழ் பாழாக விட வேண்டியதுதான்.

இவ்விஷயத்தை வாசித்ததும் யோசிக்க வருகின்றன வினாக்கள் மூன்று,

1. யோசவ்வாஸ் முனிவரின் புகழைப் போற்றி வளர்க்க வேண்டியவர்கள் இலங்கை மக்களன்றி வேறார்? இவ் ஈழத்தின் மண்ணிலல்லவா அவர் தன் உயிரைக் கிரயமாய் வைத்து உடல் மடியுமட்டும் உழைத்தார்?

2. அவருக்குப் [illegible] வல் நிதிக்காக இலங்கை மக்கள் எத்தனை ரூபா கொடுத்திருக்கிறார்கள்? நறுக்காக எண்ணினால் நாம் நாண வேண்டாமா?

3. இந்த இக்கட்டான நிலையிலே இலங்கை விசுவாசிகள் ஒன்றித்தோ, தனித்தோ எவ்விதம் உடனடியாக உதவமுடியும்? அலுவலர் அடிகளை இவ் வில்லங்கத்தினின்று விடுவிக்க இயலும்? சிந்தியுங்கள்! செயலாற்றுங்கள்!!

யோசவ்வாஸ் அலுவலகம்,
கொழும்பு.

# கத்தோலிக்க மண வாழ்க்கை

## வரதட்சணைக் கொடுமை

இன்று நம் நாட்டில் வாதட்சணையின் கொடுமையினால் எத்தனையோ பெண்கள் மணமாகாமலே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இக் கொடுமைக்கு ஏழைகள் மட்டும் பலியாகிறார்கள் என்று எண்ணவேண்டாம். நடுத்தர வகுப்பாரும்கூட இக்கொடுமைக்கு பெரிதும் ஆளாகின்றனர்.

சான்றோர்கள் நூற்றுக்கணக்காகத் தோன்றிய நாடு நம் நாடு; சிறந்த நூல்கள் பல தோன்றிய நாடு நம் நாடு; தேவாலயங்களும் அற நிலையங்களும் மலிந்த நாடு நம்நாடு என்று பெருமையாகப் பேசிக்கொள்கிறோம். தொன்று தொட்டே நம் நாடு ஒன்றுதான் பரமார்த்த நாடு என்றும், மற்ற நாடுகளோ இதுநாள்வரையில் உலகாயதப் போக்கிலே உழன்று வருகின்றன என்று ஏனைய நாடுகளைக் குறைகூறிப் பெருமையடித்துக் கொள்கிறோம். ஆனால் கல்வியறிவு பெற்ற இளைஞர்களும், பண்புள்ள மாதர்களும், பணத்துக்காக விலைபோகும் கொடுமை வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு மிகுந்துள்ளதாகக் கூற முடியுமா?

மேலை நாட்டினர் நம்நாட்டு மண வாழ்க்கையைப்பற்றிப் புகழ்ந்து கூறினாலும், பணத்திற்காகப் பெண்கள் விலைபோகும் இக் கொடுமையைப் பார்த்து இன்று நம்மை அவர்கள் எள்ளி நகையாடத்தான் செய்கின்றனர். கிறிஸ்துவர்களாகிய நம்மிடையேயும் இத்தகைய தீப்பழக்கம் இல்லையென்று கூற முடியுமா?

நம்மில் சில இனத்தவர் மாப்பிள்ளையின் படிப்பிற்கும் திறமைக்கும் நிலைமைக்கும் ஏற்றவாறு, பணம் கொடுத்துப் பெண்ணுக்கு மாப்பிள்ளையாக்கும் கொடுமை இருந்துவருகிறது. இத்தகைய கொடுமையால் அநேகரது மண வாழ்வில் சிரமங்கள் தோன்றுகின்றன. வாதட்சணையின் தொகையில் குறைவு கண்டு பெற்றோர் சொற்கேட்டு, கரம்பிடித்த மனைவியை விரட்டிவிடுவோரும் இன்று நம்மவர்களிடையே ஏராளம் இருக்கின்றனர். இதனால் பிள்ளையின் எதிர்கால வாழ்வு பாதிக்கப்படுவதை பெற்றோர் உணருவதில்லை.

இன்னும் சில குடும்பங்களில் நிச்சயிக்கப்பட்டபின்னர் வாதட்சணைத்தொகையில் கருத்துவேறுபாடு ஏற்பட்டு, அதன் விளைவால் நிச்சயிக்கப்பட்ட பெண்ணை ரத்துச் செய்வதுமுண்டு. மாப்பிள்ளை வீட்டாரின் இத்தகைய செயலினால் அப் பெண் உள்ளம் என்ன பாடுபடும் என்பதை, அதே நிலையிலுள்ள இன்னொரு பெண்ணால்தான் புரிந்துகொள்ள முடியும். வறுமையுற்ற ஒருவன் வழியில் ஒரு பொற் குவியலைக் கண்டு மகிழ்ந்து. அதனை வாரி எடுத்து வீட்டிற்குக் கொணர முயலும்பொழுது அது மாயமாய் மறைந்துவிடின் எத்தகைய ஏமாற்றமுறுவானோ, அத்தகைய ஏமாற்றம்தான் அப் பெண்ணின் மனதை ஆட்கொள்ள முடியும்.

படித்துப் பட்டம்பெற்று கல்லூரியிலோ, மருத்துவமனையிலோ, ஆசிரியையாகவும் மருத்துவராகவும் பணிபுரியும் பெண்களுக்குக்கூட, மாப்பிள்ளையின் வீட்டார் வாதட்சணை வாங்குவதில் தயங்குவதில்லை. 'ஆணுக்கு ஒரு நீதியும் பெண்ணுக்கு ஒரு நீதியும்' என்பதுபோல, ஆண்கள் படித்துப் பட்டம்பெற்று பதவிவகித்து விட்டால், பெண் வீட்டார் அவர்களுக்கு வாதட்சணை கொடுக்கவேண்டும், இதற்கு மாறாக பெண் படித்து பதவி வகித்தாலும்கூட பெண் வீட்டார், மாப்பிள்ளை வீட்டாருக்கு சீர்சிறப்புச் செய்வதோடு மட்டுமன்றி, மேற்கொண்டு ஒரு தொகையையும் மாப்பிள்ளை வீட்டாருக்குக் கொடுத்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது. பெண் படித்து பதவி வகித்தாலுங்கூட, ஏதோ பெண்ணைப் பெற்ற கடனுக்காக அவரவர் நிலைமைக்கு ஏற்றவாறு நகையைத்தான் போடுவார்கள். சீர்சிறப்புத்தான் செய்வார்கள் என்றால், அதுவும் போதாது ரொக்கமாகப் பணமும் வேண்டும் என்று மாப்பிள்ளை வீட்டார் கேட்டால், பெண் வீட்டார் என்ன செய்வார்கள்? இக் கொடுமையை யாரிடம் கூறிப் பரிகாரம் தேடிக் கொள்வது?


மணமக்கள் எக்கேடுகெட்டாலும் அதுபற்றி பெற்றோர்களுக்கு அக்கறையில்லை. அவர்களுக்கு வேண்டியது பணம் ஒன்றுதான். உண்மையிலே தன் பிள்ளை இல்வாழ்வை இனிதுடன் நடத்தவேண்டுமென்று, மாப்பிள்ளையின் பெற்றோர் விரும்பினால், இவ்வாறு நடப்பார்களா? ஆடு மாடுகளையும் அடிமைகளையும் விலைகொடுத்து வாங்குவதைப்போலத்தான், இன்று நம் நாட்டில் பெண்ணுக்கு மாப்பிள்ளையை விலைகொடுத்து வாங்குகிறார்கள். மனித தர்மத்துக்கு முரணான இக் கொடுமையை எண்ணினால் நாம் வருந்தாமல் இருக்க முடியவில்லை! இத்தகைய இழிநிலையான மனப்பான்மை நம்மவர்களிடையே இருக்கும் வரை, நம் கத்தோலிக்கு சமூகம் எவ்வாறு முன்னேற முடியும்?

மாப்பிள்ளை வீட்டாரின் இரக்கமற்ற பணவேட்டையினால், இன்று வயது வந்த பெண்ணை வைத்துக்கொண்டிருக்கும் பெற்றவர்களின் நிலை மிக வருந்தத்தக்க ஒரு நிலையிலே உளது. சில குடும்பங்களில் வாதட்சணை கொடுக்கமுடியாத காரணத்தால் பெற்றோர் தங்கள் பெண்களை அவர்களது விருப்பத்துக்கு மாறாக, பணக்கார வயோதிபர்களுக்கு இரண்டாம் தாரமாகவோ மூன்றும் தாரமாகவோ மண முடித்து வைப்பதுண்டு. இதனால் அப் பெண்கள் இல் வாழ்க்கையில் எந்த விதமான இன்பத்தையும் காணாது, தங்கள் வாழ்நாள் முழுவதும் ஏங்கி ஏங்கித் துடிக்கவேண்டிய ஓர் அவல நிலை ஏற்படுகிறது! இந்நிலையை மாற்ற கத்தோலிக்கராகிய நாம்முன்வரவேண்டாமா?

மாப்பிள்ளையை வைத்திருக்கும் ஒவ்வொரு பெற்றோரும், கத்தோலிக்க திருமணத்தின் தூய கருத்தினை மனதிற்கொண்டு இனிமேலாவது வாதட்சணை வாங்கும் பழக்கத்தை விட்டொழிக்க வேண்டும். பெண் நல்ல பண்புடையாளாக இருந்தால் அதுவே போதும் என்ற மனநிலை ஒவ்வொரு மாப்பிள்ளை வீட்டாருக்கும் வேண்டும். ஏனெனில் பணப் பொருத்தத்தைவிட, குணப்பொருத்தமே சிறந்தது. அதோடு மாப்பிள்ளையின் பெற்றோர், பிள்ளையின் விருப்பத்தைக் கேட்டுத்தான் திருமணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்வாறு மாப்பிள்ளை வீட்டார் ஒவ்வொருவரும் செயல்படுவார்களேயானால், நாளாவட்டத்தில் பணத்தை முதன்மையாகக்கொண்டு மணமக்களின் இல்வாழ்க்கையை பாழ்படுத்தும் வாதட்சணைப் பேயை நம் கத்தோலிக்கு சமூகத்திலிருந்து எளிதில் விரட்டிவிடலாம்.

—இரணைம ஞ. மிக்கேல் ராஜ்
—யேசுநாதருடைய திருஇருதயத்தூதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்புள்ள தம்பி, தங்கையரே !**

மாசித் திங்கள் 4ஆம்நாள் நம் நாட்டின் சுதந்திர ஞாபக தினம். அன்று தினம் இலங்கையை ஆபத்திலிருந்து பாதுகாத்த அமலோற்பவ தேவ அன்னையின்யின் திருநாள் மிகப் பொருத்தமாகக் கொண்டாடப் படுகிறது அன்றையதினம் நம் தாய்நாட்டின் நலன்களுக்காக — முன்னேற்றத்திற்காகத் தேவனின் திருத்தாயை வேண்டுதல் நம் தலையாய கடமை என்பதை மறந்துவிடாதீர்கள்.

— அண்ணு

# நான் ஒரு விஞ்ஞானியானல்....

நான் ஒரு பெரிய விஞ்ஞானியானல்......? நினைக்கவே என் நெஞ்சத்திலே இன்ப ஊற்றுஒன்று ஊற்றெடுத்துப் பாய்கிறது. விந்தைகள் பல புரியும் இந்த விஞ்ஞான யுகத்திலே இன்று நான் பெரியதொரு விஞ்ஞானியாக இருந்தால் உண்மையில் அதைநான் பெரியதொரு பெறுதற்கரிய பேருகவே எண்ணிமகிழ்வேன்.

ஒருகாலத்திலே சந்திரனையும், சூரியனையும் கடவுளாக எண்ணிவணங்கிய மக்கள், இன்று அதே சந்திரனையும், சூரியனையும் மண்டலங்களாகக் கருதி அங்கேபோய்க் குடியேறி வசிக்க முயன்று வருகிறார்கள். இன்று நான் பெரியதொரு விஞ்ஞானியாக இருந்தால் இந்த வான்வெளிப் பிரயாணத்திலே என் முழுக் கவனத்தையும் செலுத்தி மக்கள் மனதிலே மகிழ்ச்சியை ஏற்படுத்த முயல்வேன்.

மனிதன் ஒருவன் இந்த உலகத்திலே மகிழ்ச்சியோடுவாழ முக்கியம் தேவையானது பணம். அந்தப்பணத்தைத்தரும் பொருளாதார விருத்தியைப் பெருக்குவதற்கு நான் பெரியதொரு விஞ்ஞானியாக இருந்தால் என்னாலான ஆராய்ச்சிகளைச் செய்யத் தொடங்குவேன். உரமான உடலைப்பெற்று வாழஉதவுவது உணவு. ஆகையால் உணவுப்பிரச்சினை முதலிலே தீர்க்கப்பட வேண்டும். எல்லோருக்கும் உணவுகிடைக்கும் வகையான உன்னத திட்டம்ஒன்றை விஞ்ஞானமுறையில் தொடங்கி, விஞ்ஞான முறையால் உணவு எல்லோருக்கும் கிடைக்கும் படியாகச் செய்வேன்.

உண்பதற்கு உணவு, உடுப்பதற்கு உடை, இருப்பதற்கு இடம்ஆதிய இருந்தால் மக்கள் மகிழ்ச்சியோடு வாழத் தடையென்ன? நான் விஞ்ஞானியானல் இவைகள்யாவும் உலக மக்களுக்குக் கிடைக்கும்படியான வழிவகைகளைச் செய்வேன். இப்படியே நான்பிறந்து வளர்ந்த என் தாய் நாட்டுக்கும், என் தாய்மொழிக்கும், என்னைப் பெற்றுவளர்த்த என்பெற்றோருக்கும் பெருமை தரும்படியாகப் பல ஆராய்ச்சிகளைச் செய்து வெற்றி கொள்வேன். என்முழுநேரத்தையும் மக்கள் நலனுக்காகவே நான் செலவு செய்வேன். மக்கள் மகிழ்வே என் மகிழ்வுஎன்று எண்ணிப் பூரித்து மகிழ்ந்து கொண்டே இருப்பேன். இத்தனைக்கும் நான் பெரியதொரு விஞ்ஞானியாக வேண்டுமே!

கே. கே.

## சுதந்திரக்கீதம் பாடிவா

இலங்கை அன்னை விடுதலைநாள்
எழுச்சி பெற்ற மக்களின் நாள்
தலம் புகழும் சுதந்திர நாள்
தனிக்கொடி பறந்திடும் நாள்.

அன்னை நாட்டை வணங்கி நீவா
ஆளும் மக்கள் நாங்களென்று வா
இன்னும் என்ன அடிமையா வா
ஏறுபோல வீறுகொண்டு வா

பெற்ற மண்ணை முத்தமிட வா
பெருமை தரும் கதைகள் பேசிவா
சுற்றமெல்லாம் சூழநீவா
சுதந்திரக் கீதம் பாடிவா.

அடிமை ஆட்சி அழிந்தது வா
அடக்குமுறை தகர்ந்தது வா
மிடிமை யெல்லாம் ஒழிந்தது வா
மேவுமின்பம் நிறைந்தது வா.

எஸ். அரியரெத்தினம்

# பரிசு

குமார் எதை மறந்தாலும் ஐம்பதுசதம்கொடுத்து "சுவீப் டிக்கட்" வாங்க மறந்ததில்லை. நினைத்தவுடன் ஐம்பதுசதம் கிடைத்துவிடக்கூடிய வசதிபடைத்தவனல்ல அவன். அன்றாட வாழ்க்கையை மிகவும் தொல்லையுடன் நடாத்திவரும் சாதாரண தொழிலாளி,

முக்கிமுக்கி உழைத்தாலும் நாள் ஒன்றுக்கு மூன்றுரூபாவுக்குமேல் சம்பளம் பெற்றதாகவே அவன் சரித்திரத்தில் கிடையாது. அதிலும் அவனுக்கு வேலைகிடைப்பது மாதத்தில் இருபது நாட்களுக்கும் குறைவாகத்தான். அந்த இருபது நாட்களும் வேலைகிடைக்க எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் அப்பப்பா! இந்தக் கஷ்டத்தில் அவனுக்கு மனைவி, மூன்று குழந்தைகள் வேறு.

* * *

பரிசுதான் கிடைக்கவில்லை. ஒரு நாள்காலை குமார் சுவீப்முடிவுகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று அவன்கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. ஆம், அவனுடைய டிக்கட் எண் "13D 00780" அதே எண்ணுக்குத்தான் முதலாம்பரிசு ஐம்பதினாயிரம் ரூபா. அவன் உள்ளத்திலே பல எண்ணக்கனவுகள் எழுந்தன. உடனே மனைவியை அழைத்து விடயத்தைச் சொல்லிக் கொழும்புக்குப் புறப்பட ஆயத்தம் செய்ய உத்தரவிட்டான். பணம் கிடைத்த செய்திகேட்ட பக்கத்து வீட்டார் இவர்களின் வழிச்செலவுக்குப் பணஉதவி செய்தனர்.

கொழும்பில் உறவினர் ஒருவர்வீட்டில் தங்கி, கொழும்பு முழுவதையும் ஒருசுற்றுச் சுற்றினர்கள். மறுநாள் தந்தையும், மூத்தமகனும் மட்டும் பரிசுபெறும் நிலையத்திற்கு ஒரு வாடகைக்காரில் சென்றார்கள். ஆசனத்தில் யாரோ விட்டுச்சென்ற பத்திரிகையின் ஒருபகுதி கிடந்தது. அலட்சியமாக அதை எடுத்துப் பார்த்த குமார் அப்படியே தன் மகன்மடியில் சாய்ந்துவிட்டான். என்னவோ ஏதோஎன்று பதறியமகன் தந்தையின் கையில்இருந்த பத்திரிகையை எடுத்துப் பார்த்தான். அதன் ஒரு பகுதியில் "பிழைதிருத்தம்" என்று தடித்த எழுத்தில் பிரசுரிக்கப்பட்டு அதனடியில் "நேற்று வெளியாகிய சுவீப்முடிவில் 13D 00780 என்றிருப்பதை 13A 00780என்று திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்" என்றிருந்தது.

எஸ். ஏச். நாதன்.

# உங்களுக்குத் தெரியுமா?

1. நாட்டில்உந்நதபதவிவகித்திருந்து, வெள்ளை மாளிகையில் வசித்திருந்த காலத்திலே அமெரிக்க ஜனாதிபதிகள் சிலர் உத்தியோக பதவிக்குரிய சம்பளத்தைப் பெற மறுத்துவிட்டார்கள் என்பது தெரியுமா?

2. அமெரிக்க ஜனாதிபதிகளிலே முதலாவதாகத் தமது சம்பளத்தைப் பெற மறுத்தவர் ஜோர்ஜ் வாஷிங்ரன். மற்றவர், ஜோன் கென்னடி. இவர்கள் தங்கள் சம்பளப் பணத்தை உதாரசிந்தையுடன் அரசாங்கத்துக்கோ அன்றேல் தருமத்துக்கோ கையளித்துவிட்டார்கள் என்பது தெரியுமா?

3. அமெரிக்க ஜனாதிபதி அன்ட்று ஜோன்சன் தமது 60 ஆம் வருடப் பிறந்த பெருநாளன்று வெள்ளை மாளிகையிலே 400 பிள்ளைகளை விருந்திட்டு உபசரித்து அந்தச் சுபநாளைத் தாமும் கொண்டாடிப் பிள்ளைகளும் கொண்டாடச் செய்து இன்பமுற்றார் என்பது தெரியுமா?

4. அமெரிக்க ஜனாதிபதி கிறோவர் கிளீவ்லண்ட் பிள்ளைகளை அதிகமாக நேசித்தார். தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற தினமன்று அல்பனியிலுள்ள திரு இருதயநாதர் கன்னிகா மடத்திலுள்ள தம்முடைய சின்னச் சிநேகிதர்கள் அந்நாளை இனிதே கொண்டாடும்படியாக 500 டலருக்கு ஒரு செக் அனுப்பிவைத்து அன்று தினம் அவர்களுக்கு விடுமுறை அருளுமாறும் வேண்டிக்கொண்டார் என்பது தெரியுமா?

5. அமெரிக்க ஜனாதிபதி அன்ட்று ஜாக்ஸனுக்கு ஒருமுறை 1,400 றுத்தல் பாற்கட்டி வெகுமதியாக வழங்கப்பட்டது. அதனை மக்களுக்கு வழங்குவதற்காக அவர் தம்முடைய பதவியிலிருந்து இளைப்பாறத் தீர்மானித்தார். அப்போது மாளிகையிலே பன்னூற்றுக்கணக்கான தரிசகர்கள் வரவேற்கப்பட்டு அவர்கள் அந்தப் பேரானபாற்கட்டியில் ஒவ்வொரு துண்டு பெற்றுக் கொண்டார்கள் என்பது தெரியுமா?

6. அமெரிக்க ஜனாதிபதி யு. எஸ். கிறான்ற் 1884 ஆம் ஆண்டு தமது கடன்களைத் திரும்ப இறுக்க வகையின்றியிருக்கக்கண்டார். அப்பொழுது தமது கடன்களைத் தீர்த்துத் தம்முடைய குடும்பத்துக்குப் பணம் தேடிவைக்க முயன்று தமது ஞாபகங்களைப்பற்றிய புத்தகங்களை எழுதினர். அவர் இறந்தபின் அவர் எழுதிய புத்தகங்களால் அவருடைய குடும்பத்துக்கு ஐந்துலட்சம் டலர் வருமானம் கிடைத்தது என்பது தெரியுமா?

7. அமெரிக்க ஜனாதிபதியாயிருந்து காலஞ்சென்ற ஜோன் கென்னடி அவர்களின் கல்லறையைக் கடந்த 1967-ம் ஆண்டிலே ஐம்பதுலட்சம் மக்களுக்கு மேல் தரிசித்துத் திரும்பியிருக்கிறார்கள் என்பது தெரியுமா?

8. அமெரிக்க ஜனாதிபதி வூட்றோ வில்ஸனின் நாமமும் உலகசரித்திரத்தில் நிலைபெறுவதொன்றாகும். 1916 ஆம் ஆண்டு மாசிமாதம் 22 ஆம் திகதி — அதாவது இற்றைக்குச் சுமார்50 வருடங்களின்முன் அவருடைய காலத்திலேயே முதலாவது உலகயுத்தம் நடந்தது. இங்கிலாந்துக்கும், பிரான்சுக்கும், ஜேர்மனிக்குமிடையே சமாதானம் உண்டுபண்ண முயன்று ஒரு சமாதான மகாநாட்டைக் கூட்டியபோது ஜேர்மனி அதற்கு உடன்படாததிலிருந்து அந்த உலகயுத்தத்தில் அமெரிக்காவை இறங்கவைத்து ஜேர்மனியைத் தோற்கடிக்கப் பேருதவியாயிருந்து பெரும்புகழ்படைத்தார் ஜனாதிபதி வூட்றோ வில்சன் என்பது தெரியுமா?

9. அமெரிக்க புதிய ஜனாதிபதித்துவ தேர்தல் இவ்வாண்டு கார்த்திகை மாதம் நடைபெறவிருக்கிறது. இந்தத் தேர்தலில் காலஞ்சென்ற ஜனாதிபதி ஜோன் கென்னடி அவர்களின் சகோதரரான செனெற்றர் றொபேட் கென்னடியையும் ஓர் அபேட்சகராக நிறுத்துவதற்கான முயற்சி நடைபெறுகின்றது என்பது தெரியுமா?

### மல்லாகம், புதுமைமாதா ஆலய பூசைப்பரிசாரகர் சபையின்

# ஓராண்டு நிறைவு விழா

கடந்த 1967ஆம் ஆண்டு தைத் திங்கள் 10ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி சபையின் ஓராண்டு நிறைவு விழா இம்மதி 13ஆம் நாள் கட்டளைக்குரவர் வண. பிதா நீ. ம. சவிரிமுத்து அடிகளின் தலைமையில், இல்லறத் தொண்டர் திரு. ச. மா. செல்வராஜா அவர்களினது ஊக்கத்தினாலும், இளைஞர்களினதும் பெற்றோர்களினதும் ஒத்துழைப்பினாலும் மல்லாகம் புதுமை மாதாதேவாலய முன்றிலில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது!

அன்று, என்றுமே கண்டிராதவகையில் ஆலயமுன்றில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. விழாவிற் கலந்துகொள்வதற்கென்று எங்கள் அயற் பங்குகளான, சுன்னாகம், குளமங்கால், உரும்பிராயைச் சேர்ந்த பூசைப்பரிசாரகர்கள் தங்கள் கொடிகளை ஏந்தி அணிவகுத்துவந்து ஆலயத்தைஅடைய, பெற்றோரும், பெரியோரும் சூழ இருக்க பி. ப. 5. மணியளவில் திவ்விய பலிப்பூசையிலும், தொடர்ந்து தேநீர் விருந்திலும் பங்குகொண்டனர். பி. ப. 6.30 மணியளவில் ஞானப்பிதா நீ. ம. சவரிமுத்து அடிகள் விளக்கேற்றிக் கூட்டத்தை ஆரம்பித்துப் பேசுகையில், அழகாக அலங்கரித்துப் பலரின் ஒத்துழைப்புடன் விழாக் கொண்டாடுவதல்ல எமது நோக்கம். நாங்கள் எல்லோரும் ஒருதாய் மக்கள் என்ற சகோதர மனப்பான்மையுடன் ஒற்றுமையே எமது உயிர் நாடி! என்ற பரஸ்பர உறவுடன் பழகுதல் வேண்டும் என்றார். சபைத்தலைவர் வரவேற்புரை கூற செயலாளர் பொருளாளர் ஆகியோர் தம் வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தனர், தொடர்ந்து இல்லறத் தொண்டர் திரு. செல்வராசா, திரு J. சிறில் மற்றும் பலர் சொற்பொருக்காற்றினர். பின்பு விழாவின் ஆண்டுமலர் வண. பிதா நீ. ம. சவிரிமுத்து அடிகளால் வெளியிடப்பட்டது. ஈற்றில் உப தலைவர் நன்றி கூற விழாவின் சிறப்பம்சமாக, ஒற்றுமையின் எடுத்துக்காட்டாக மல்லாகம், சுன்னாகம், குளமங்கால், உரும்பிராய் பங்குகளைச் சார்ந்த பூசைப்பரிசாரகர் ஒன்றுசேர்ந்து "மூவேந்தர்கள்" என்னும் புதுமை அம்சங்கள் கொண்ட நற்செய்தி நாடகத்தை நடாத்த விழா இனிதே முடிவெய்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2-ம் வத்திக்கான்

# கிறிஸ்தவ ஒன்றிப்பைச் செயல் படுத்துதல்

ஒற்றுமையை மீண்டும் கொணர்தல்
திருச்சபை முழுவதின்,
அதாவது விசுவாசிகளுடையவும்
மேய்ப்பர்களுடையவும்
கடமையாகும். (5)
திருச்சபை
தனது அழைப்புக்கு
அதிக உண்மையாய் இருப்பதால்தான்
அதில் மறுமலர்ச்சி நிகழ்கிறது.
திருச்சபையை நிலையான சீர்திருத்தத்திற்கு
அழைக்கின்ருர் கிறிஸ்து.
மண்ணுலகிலுள்ள
ஒரு மனித நிறுவனம் என்ற
முறையில் இச்சீர்திருத்தம்
திருச்சபைக்கு
எப்போதும் தேவைப்படுகிறது. (6)

## இதய மாற்றம்

உள்ளரங்க மாற்றமின்றி
உண்மையான
கிறிஸ்தவ ஒன்றிப்பியக்கம்
இருக்க முடியாது.
ஏனெனில்,
உள்ளங்களைப் புதுப்பித்தலாலும்,
தன்னையே ஒறுத்தலாலும்,
அன்பை மிகுதியாகப் பொழிவதாலும்
ஒற்றுமைக்கான விழைவுகள் தோன்றி
வளர்ச்சி அடைகின்றன.
எனவே,
உண்மையாகவே நம்மை ஒறுக்கவும்,
நாம் தாழ்ச்சியுடையவர்களாகவும்,
சேவை செய்வதில் நற்பண்புடையவர்களாகவும்,
பிறரிடத்தில் பெருந்தன்மை
கொண்டவர்களாகவும்,
இருக்கும்படியான அருளைத்
தருமாறு இறை ஆவியை
நாம் மன்ருடவேண்டும் ...
ஒற்றுமைக்கு எதிரான
குற்றங்களுக்கும் பொருந்தும்.
ஆகவே,
எங்களுக்குக் குற்றம் செய்தவர்களை
நாங்கள் மன்னிப்பதுபோல,
கடவுளிடமும்
பிரிந்த எம் சகோதரர்களிடமும்
தாழ்மையாகச் செபித்து
மன்னிப்புக் கோருகின்ருேம்.
தாங்கள் நற்செய்திக்கொப்ப
எவ்வளவுக்குப் புனித வாழ்வு
நடத்த முயலுகிருர்களோ
அவ்வளவுக்கு
சிறந்த முறையில்
கிறிஸ்தவ ஒன்றிப்பை
வளர்க்கின்றனர். (7)

## செபம்

இந்தஇதய மாற்றமும்
வாழ்வின் புனிதத் தன்மையும்
கிறிஸ்தவர்களின்
ஒன்றிப்பிற்கான பொது,
தனிச் செபங்களுமே
கிறிஸ்தவ ஒன்றிப்பியக்கம்
முழுவதன் உயிர்நாடியாகக்
கருதப்படவேண்டும்.
மேலும்,
இவை ஞான ஒன்றிப்பியக்கம் என்று
அழைக்கப்பெறத் தகுதியும் பெறும்.
“எல்லாரும் ஒன்ருய் இருப்பார்களாக”
(அரு. 17 : 21)
என்று மீட்பர்தாமே
தாம் சாவதற்கு முந்தின இரவு
திருச்சபையின் ஒற்றுமைக்காகத்
தம் தந்தையைப் பார்த்து
ஆர்வத்தோடு விடுத்த செபத்தைச்
செய்ய
அடிக்கடி கூடுவது
கத்தோலிக்கருக்கு வழக்கமாகும்.
“ஒற்றுமைக்காக”
நடத்தப்பெறும் செபங்கள்,
கிறிஸ்தவ ஒன்றிப்பியக்கக்
கூட்டங்கள்போன்ற
தனிப்பட்ட சூழ்நிலைகளில்
கத்தோலிக்கர்
பிரிந்த சகோதரர்களுடன் இணைந்து
செபிக்கலாம்.
இவ்வாறு செய்வது
உண்மையில் விரும்பத்தக்கதாகும்.
ஒன்றிப்பெனும் அருளை
இறைஞ்சுவதற்கும்
பொதுச்செபங்கள்
நிச்சயம் பயன்தரும்.
அத்தோடு,
இவை கத்தோலிக்கர்களைப்
பிரிந்த சகோதரர்களுடன்
இன்றும் இணைத்திருக்கும்
பிணைப்புக்களை
உண்மையாகச் சுட்டிக்காட்டுகின்றன.
“ஏனென்ருல்,
இரண்டு, மூன்று பேர்
என் பேரால்
எங்கே கூடியிருப்பார்களோ,
அங்கே அவர்கள் நடுவே
நானே இருக்கிறேன்” (மத். 18 : 20)
(8)

## திருச்சபையில் வந்துள்ள மாற்றங்கள்

“கத்தோலிக்க கிறீஸ்தவசபையில் எங்கு பார்த்தாலும் மாற்றங்களைக் காண்கின்ருேம். வழக்கத்திலே கத்தோலிக்க முறைகளில் மாற்றங்கள் காண்பது மிக அரிது. ஆனல், மாற்றங்கள் வரும்போது மிகப் பலமாகவே அவை வந்து சேரும். தற்போது நடைபெற்றுவரும் மாற்றங்கள் மிகப் பிரமிப்பை அளிக்கின்றன. வழிபாட்டுமுறைகள் சுதேசபாஷைகளில் புகுத்தப்பட்டு வருகின்றன. இன்னும் சில மாதங்களில் பிறசமயத்தவர்களிலும் பார்க்கப் பலமான முறையில் சுதேச பாஷையைக் கத்தோலிக்கர்கள் உலகமெங்கும் பாவித்து வருவார்கள். கத்தோலிக்கரின் வழிபாட்டு முறைகளில் மாத்திரமல்ல, அவர்களது மனப்பான்மையிலேயே பலத்த மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்பலமான காற்றின் வேகத்தில் பிறசமயத்தவர்களும் அகப்பட்டுக் கொள்வார்கள். இதன் பயனுகப் பிறசமயத்தவர்களிடையும் பல மாற்றங்கள் ஏற்படுவதை நாம் எதிர்பார்க்கலாம்” என்ருர் லூதரன்சபைத் தலைவர்களில் ஒருவராகிய டாக்டர் லின்பெக் என்பவர். இவர் வத்திக்கான் சங்ககாலத்தில் தனது சபையின் சார்பில் அவதானியாகக் கடமையாற்றியவர்.

● ஆயுள்வேத மருந்துச் சாக்குகளிலிருந்து தயாரிக்கப்படும் “மனசேப் புடன்ராய்க்”என்ற ஊசிமருந்தினல்ஒருநோயாளியின் சரீரத்திலுள்ள கான்சர்எனப்படும் புற்றுநோய்க் கண்ணறைகளை எந்தப்பருவத்திலும் முற்றாக அகற்றிவிட அன்றேல் அழித்துவிட இப்போது முடியுமென்று பச்சிலைமூலிகளின் ஆராய்ச்சிஸ்தாபன தலைவரான டக்றர் எஸ். சி. சென் குப்தா தெரிவித்திருக்கின்ருர்.

● அமெரிக்க ஜனதிபதி ஜோன்சன் அவர்கள் வருடமொன்றுக்கு 36,000 பவுண் சம்பளமாகப் பெறுகின்ருர். இதில் ஒருபகுதிக்கு அவர் வருமான வரி இறுக்கவேண்டியவர். இதுதவிர அவர் செலவுபணமாக 18,000பவுண் பெற்றுவருகின்ருர். ஆனல், அவர் இதுவிஷயமாய்ப் பிரித்தானிய எலிசபேத் மகாராணியாருடன் சரிசமனுக வைத்துப்பார்க்கக் கூடியவரல்ல.

● எலிசபேத் மகாராணியாருக்கு அரசாங்கம் சம்பளமாக 14,74,000 பவுண் கொடுக்கின்றது. இதற்குவருமானவரி கிடையாது. இதில்பெரும் பகுதி அவரின்மாளிகையைப் பரிபாலிப்பதற்கும், மற்றும் குடும்பரிசனரைப் பராமரிப்பதற்குமே செலவாகிறது. இந்தச்சம்பளம்தவிர அவரின் பிரத்தியேக செலவுகளுக்கென்றும் 60,000பவுண் அரசாங்கம் கொடுக்கின்றது.

# லோங் தொழில்நுட்ப - பொறியியல் கல்லூரி

(The City and Guilds of London Institue)

## லண்டன் நகரமன்றத்தின் பின்வரும் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார்செய்கிறது

1. மின்சார பொறியியல் பயிற்சி (ஆரம்பம்)
2. மின்சாரப் பொறியியல் பயிற்சி (இடைத்தரம்)
3. மோட்டார் வாகன இயந்திர வேலை
4. மோட்டார் வாகன மின்சாரவேலை
5. மோட்டார் வாகன தொழில்நுட்ப தராதரப் பத்திரம்
6. மோட்டார் வாகன தொழில்நுட்ப வேலையும், வேறு தொழில்நுட்பப் பயிற்சிகளும்.
7. தந்திப் போக்குவரத்து தத்துவங்கள்

பிரவேசத்துக்குரிய ஆகக்குறைந்த தகுதிகள் :

அ) பொதுத்தராதரப் பத்திரப் (சாதாரணம்) பரீட்சையில் ஆங்கிலத்திலும், கணிதத்திலும் சித்தி

அல்லது

ஆ) ஆங்கிலத்தில் வகுப்புப்பாடங்களைக் கற்கும் திறமையும், கணிதத்தில் போதிய அறிவும்.

கனிஷ்ட தொழில்நுட்பப் பயிற்சி (தமிழில்)

பிரவேசத்துக்குரிய தகுதி: கனிஷ்ட தராதரப் பத்திரம்

*1968 மாசி 1ஆம்தேதி வகுப்புகள் தொடங்கும்*

பிரவேசப் பத்திரங்களை கீழ்க்காணும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்

அதிபர், லேட்,
கிட்டங்கித்தெரு, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

‘அலிசன்’ பியாஞே - மரக்கூடு நல்லநிலையில் இருக்கிறது. 1,500 ரூபாவுக்குமேல் கேட்கும் கேள்வியாளருக்குக் கொடுக்கப்படும்.

எஸ். வீ. வைரமுத்து,
தெல்லிப்பளை.

11-68

வஸ்தியாம்பிள்ளை இம்மானுவேல்
அவர்கள்
அமரத்துவமடைந்த

## 7-ம் வருட ஞாபகம்

பிறப்பு: 12-2-1889 இறப்பு: 4-2-1961

“சீவியத்தில் இவரை நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்.”

இவரது ஆன்மசாந்திக்காக சில்லாலை, பரி. ஆரோக்கியமாத ஆலயத்தில் ஒரு துக்கப் பாடற்பூசை 5-2-68இல் ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறுவோர் இவருக்காக வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். முடிவில்லாப் பேரொளி இவர் மீது ஒளிர்வதாக.

சில்லாலை

12-68

## 12-வது வருட மரண ஞாபகம்

தோற்றம் : 22-7-1888. மறைவு : 18-2-1956.

“என்னைச் சீவியத்தில் நேசித்தவர்களே, மரணத்தில் மறவாதீர்கள்.”

எனது நேசபத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய ஸ்ரீமான் அலேசுப்பிள்ளை பிரான்சீஸ்பிள்ளை அவர்கள் இவ்வுலகை நீத்த பதினேராவதுவருடம் இம்மாதம் 18-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பூர்த்தியாவதால், மறுநாள் 19-ந் தேதி திங்கட்கிழமை அவருடைய ஆத்துமஇளைப்பாற்றிக்காக யாழ்ப்பாணம் சஞ்சுவாம் கோயிலில் காலை 6மணியளவில் ஒரு துக்கப்பாடற்பூசை நிறைவேறும்.

இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கனினியர், உறவினர், சிநேகிதர்கள் அவருடைய ஆத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பத்தாவை இழந்து துன்புறும் மனைவி:
லூர்துமரி பிரான்சீஸ்பிள்ளை
அருமைத் தந்தையை இழந்து
துயருறும் பிள்ளைகள் :
சங். சிஸ்ரர் மேரி பிறசன்ரேசன், (திருக்குடும்பமடம்). சங். சிஸ்ரர் குழந்தையேசுவின் மேரி கலிஸ்ரா, (கார்மேல்மடம்).

15-68

## நன்றித்துதி

கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான அர்ச். யூதாததேயு அப்போஸ்தலரிடம் நான்கேட்ட மன்ருட்டு கிடைக்கப் பெற்றேன்.

ஓர் அடியாள்

யாழ்ப்பாணம். 14-68

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அர்ச்.சூசையப்பர், அர்ச். யூதாததேயு, அர்ச். நீற்றம்மாள் இவர்கள் மூலமாய் திருமுகநாதரிடம் கேட்டமன்ருட்டுகள் அனுகூலமானது. நன்றியறிதலாக இதனைப் பிரசுரிக்கிறேன்.

ஒரு பக்தன்

16-68

## நன்றியறிந்த தோத்திரங்கள்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினலும், பரி. சதாசகாயமாதாவின் வேண்டுதலாலும் எனதுதந்தை மாருத நோயினின்றும் குணமடைந்தார். இன்னும் அவரதுநோய் சத்திர சிகிச்சையின்றிக் குணமடைய வேண்டுமென்று இரந்து நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்

* * *

யேசுவின் திருஇருதய இரக்கத்தை முன்னிட்டு அர்ச். லூசியம்மாளிடம் நான் கேட்ட மன்ருட்டுக்குத் தயவாய்இரங்கி சத்திர சிகிச்சையாலும் குணமடையாத கண்களில் ஒன்ருவது குணமடைய வரந்தந்தருளியமைக்காக நன்றிகூறி, இன்னும் பூரணசுகம் கிடைக்குமாறு இறைஞ்சி நிற்கிறேன்.

அடியாள்

13-68

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## சிறந்தவிவசாயிக்குப் பரிசு

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் விவசாயப்போட்டியில் தலைசிறந்தவராகத் தெரிவுசெய்யப்படும் விவசாய மன்னர்களுக்கு சுவமானபரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன. அதாவது அவர்கள் இந்தியா சென்று திரும்புதற்கான இலவசப்பிரயாணவசதி அளிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது. இவ்விதம் பிரயாணஞ்செய்கிறவர்கள் அங்குள்ள பாரிய பாற்பண்ணைகள், நீர்ப்பாசன சாதனங்கள், அணைக்கட்டுகள் முதலியவைகளை நேரில்கண்டுகொள்ளலாம்.

## காரியாதிகாரி வழங்குகிறார்

திருமணம், சவீனம்போன்ற அவசரதேவைகளுக்கான மிளகாய், மல்லி ஆகியவைகளைப் பெறுவதற்கான பெர்மிற்றுகள் சென்றசனிக்கிழமை முதல் யாழ்ப்பாணக் காரியாதிமூலமே வழங்கப்படுகிறது. இதுவரை இந்தப் பெர்மிற்றுகள் உதவிஉணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிமூலமே வழங்கப்பட்டு வந்தன.

## மலேரியா பரவுகின்றது

சமீபத்தில்வீசிய சூறுவளியும், பெய்தபெருமழையும் கொண்டுவந்த பரிசு மலேரியாச் சுரமென்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. தற்போது இந்தக்கொடிய சுரம் நாட்டின் பல்வேறுபகுதிகளிலும் பரந்து மக்களுக்குப் பெரும் கஷ்டத்தை உண்டுபண்ணிவருகிறது. அதனால் இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பலவிடங்களில் தடுப்பு நிலையங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. ஆஸ்பத்திரிகளுக்கும், மருந்துச்சாலைகளுக்கும் மருந்துகள் அனுப்பிவைக்கப்படுகின்றன. குடியேற்றதிட்டங்களில் மலேரியாபரவினால் உணவுப்பொருள்உற்பத்தி வேலைகளையெல்லாம் பாழாக்கிவிடுமென்ற அச்சம் உண்டாயிருக்கிறது.

## எம். பி.களும் சம்பளமும்

கவர்னர்-ஜெனறலின் அலவன்சில் 3,000ரூபாவையும், மந்திரிகளின் அல்வன்சில் 600ரூபாவையும், எம். பி. களின் அலவன்சில் 150ரூபாவையும் குறைக்க வேண்டுமெனச் சென்றசனிக்கிழமை நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக்கட்சிக் கூட்டத்தில் பிங்கிரியா எம். பி. ஒருபிரேரணையைக் கொண்டு வந்தார். தங்கள் அலவன்சை எந்த விதமாகவும் குறைப்பதைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், தற்போதைய அலவன்சுடன் தங்கள் கடமைகளைத் திருப்திகரமாகச்செய்து கொள்ள முடியாதநிலையில் தாங்கள் இருந்துவருகின்றனரென்றும் பலஅரசாங்க எம். பி. கள் கருத்துக்காட்டியமையாலே இதுவிஷயமாய் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

## புதியகூப்பன்கள்

இந்தமாசிமாதம் 29ஆம்திகதிக்குள் சகலருக்கும் 24-வது தொடர்ச்சிப் புதிய அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்கள்—அதாவது கூப்பன்கள் வழங்கப்படவிருக்கின்றன. இதுசம்பந்தமாகச் சகல சில்லறைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தனிப்பட்ட அதிகாரம் பெற்ற வியாபாரிகளுக்கும். ஒருசுற்றறிக்கை தயாரிக்கபபட்டுள்ளது. அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்கள் வழங்குவது, கையாளுவது சம்பந்தமான சகலவிதிகளும் அதில் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

## புதிய வித்தியாதிபதி

வித்தியாதிபதியாக மட்டக்களப்பிலே கடமையாற்றி வருகின்ற திரு. எஸ். தணிகாசலம்அவர்கள் இந்தமாசிமாதமுதல் வடபகுதி வித்தியாதிபதியாக இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறாரெனத் தெரியவருகிறது. இவர் முன்னரும் வடபகுதி வித்தியாதிபதியாகக் கடமையாற்றியவர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

## மரவள்ளிக்கிழங்கும் இஞ்சியும்

அப்புத்தளையைச்சேர்ந்த ஆரியாப்பத்தனைஎன்ற கிராமத்திலே சாகுல்ஹமீதுஎன்பவரின் மூன்றுவயதுப் பெண்பிள்ளை சென்றசனிக்கிழமை மரவள்ளிக்கிழங்கைச் சாப்பிட்டுச் சிறிதுவேளையின்பின் வயிறுவலிக்கிறதெனக் கூறியது. அப்பொழுது இஞ்சிசாப்பிட்டால் மரணம் சம்பவிக்கும் என்பதை அறியாத அப்பிள்ளையின்பெற்றூரால் இஞ்சிகலந்த காப்பியும். அத்துடன் சிறுகப்பச்சை இஞ்சியும் கொடுக்கப்பட்டது. பிள்ளை மறுநிமிஷம் பிணமாகக் கீழேவிழுந்தது.

## கால்நடைகளின் விற்பனைச்சந்தை

சுழிபுரம் கிராமச்சபைவளவிலே மாதம்ஒருமுறை ஆடுமாடுமுதலாம் கால்நடைகளின் விற்பனைச் சந்தை ஒன்று நடைபெறச் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதிலே எல்லாவிதமான கால்நடைகளும் விற்பனைக்குள்ளாவதுடன் சில ஏலத்திலும் விற்பனை செய்யப்படும்.

## வத்திக்கான் வானொலி

வத்திக்கான் வானொலி இலங்கைக்கு ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் ஒலிபரப்பும் நேரம் கடந்த 15-1-1968 முதல் இலங்கைநேரம் இரவு 8-30 மணியாக (15,00 hours GMT) மாற்றப்பட்டுள்ளது.

## கண்காணிப்புச்சபை

யாழ்ப்பாண மாவட்டத்திலே வாலிபர்கள்மத்தியில் ஒழுங்கையும், சட்டத்தையும், கட்டுப்பாட்டையும் நிலைநாட்டுமுகமாகக் கண்காணிப்புச் சபைஒன்று நிறுவப்படவிருக்கிறது. மாலைவேளைகளில் வாலிபர்கள் கூட்டம் கூட்டமாக வீதிகளில் அலைந்துதிரிவதைத் தடுத்துநிறுத்தும் கடமையை இந்தச்சபை மேற்கொள்ளவிருக்கிறது.

## அமெரிக்கவைத்தியகப்பல்

வருகிறசித்திரைமாதம் 15ஆம்திகதி இலங்கைவந்து சேரவிருக்கும் "ஹோம்" என்ற அமெரிக்க வைத்திய சேவைக்கப்பல இங்கு தங்கியிருக்கும் பொழுது பத்துலட்சரூபா பெறுமதியான வைத்தியஉதவி அளிக்கவிருக்கிறது. அது வந்துசேர்ந்ததும் அதில் வைத்தியசேவை நடத்தும அமெரிக்க டக்றர்மார் இலங்கை ஆஸ்பத்திரிகளிலும், இலங்கை டக்றர்மார் அந்த வைத்திய கப்பலிலும் கடமையாற்றுவார்கள். அதிகமகடுமையான நோய் கண்டிருக்கிறவர்கள் இந்தக்கப்பலில் சிகிச்சைபெற ஏற்றுக்கொள்ளப் படுவார்கள். 108நோயாளர் படுக்கைகளைக்கொண்ட இந்தக்கப்பலில் 150 டக்றர்மார் கடமையாற்றுகின்றனர். இது சகலநவீன வசதிகளையும் கொண்டுள்ளது.

## மாணவரும் களைபிடுங்குதலும்

நெல்வயல்களிலே பாடசாலைமாணவர்களின் களைபிடுங்கும் இயக்கத்தின் கீழ் சென்றவருடம் புரட்டாசி 16ஆம் திகதிக்கும், மார்கழி 9ஆம்திகதிக்குமிடையிலே மொத்தமாகப் 11,320 ஏக்கர் வயல்களில் களைபிடுங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவற்றிலே யாழ்ப்பாணத்தில் 1988 ஏக்கரிலும் மன்னாரிலே 106ஏக்கரிலும், வவுனியாவில் [illegible] ஏக்கரிலும் களை பிடுங்கப் பட்டிருக்கிறது.

## சிக்கனவாழ்க்கை

ஆடம்பரவாழ்க்கையைக் கைவிட்டுச் சிக்கன வாழ்க்கை—அதாவது எளிய வாழ்க்கை நடத்த வகைசெய்யும் புதியசட்டம்ஒன்று விரைவிலே நடைமுறைக்கு வரும்போல் இருக்கிறது. இந்தச்சட்டத்தை மீறுகிறவர்களுக்குச் சிறைத்தண்டனை அல்லது பெரும்அபராதம் விதிக்கப்படுமாம். இந்தச்சட்டத்தின்கீழ் விருந்துவைபவங்களில் நூறுபேருக்கு மேற்பட்டவர்களுக்கு விருந்தளிப்பது தடைசெய்யப்படும். இடாம்பீகவாழ்க்கையைக் கைவிட்டு எளியவாழ்க்கை நடத்தி நாட்டைவிருத்திசெய்யுமாறு பணம்சம்பாதிப்பதற்கு மக்கள் கடினமாக உழைக்கவேண்டுமென்று பிரதமர் மக்களுக்கு ஒருவேண்டுகோள் விடுப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## 1,300பஸ்களின் நிலை

நாடுமுழுவதிலுமுள்ள போக்குவரத்துச்சபைக் கராஜ்களில் 1,300பஸ்கள் வரை பழுதடைந்து வீணாகச் சோம்பிக் கிடக்கின்றன. இவைகள் போக்குவரத்துச் சபையிடமுள்ள பஸ்களின் தொகையில் சுமார் மூன்றிலொரு பங்காகும். மாகாணப்பகுதிகளிலுள்ள டிப்போக்களிலே பழுதடைகின்ற பஸ்களின்தொகை தினமும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

## இளைஞர்களுக்கு வேண்டுகோள்

உணவுப்பொருள் செய்கையை அபிவிர்த்திசெய்யும் இயக்கத்தில் மேன்மேலும் ஈடுபட்டுப் பொருளாதாரப் புரட்சிஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்றும், உணவுசம்பந்தமாய்ச் சுயதேவையைப் பூர்த்திசெய்யுமாறு கடுமையாகஉழைத்து நாட்டைச் சுபீட்சபாதைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் பிரதமர்டட்லி சேனநாயக்க நாட்டின் இளைஞர்களுக்குச் சென்ற செவ்வாய்க்கிழமை ஒருவேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

## இருபுதிய மந்திரிகள்

மந்திரிசபையில் செய்யப்பட்டுள்ள மாற்றம்காரணமாக இரு மந்திரிகள் புதிதாக நியமனஞ்செய்யப் பட்டுள்ளனர். இவர்களில் சனப்பிரதிநிதிகள் சபையின் முன்னாள் சபாநாயகரும், நாத்தாண்டியாத்தொகுதிப் பிரதிநிதியாகச் சமீபத்தில் தெரிவுசெய்யப்பெற்றவருமான திரு. ஹியூ பெர்னாண்டோ வர்த்தகமந்திரியாகவும், கண்டித்தொகுதிப் பிரதிநிதியான திரு. ஈ. எல். சேனநாயக்கா சுகாதார மந்திரியாகவும் பதவியேற்றிருக்கின்றனர். இதுவரை சுகாதாரமந்திரியாய் இருந்துவந்த திரு. எம். டி. எச். ஜயவர்த்தன விஞ்ஞான ஆராய்ச்சி-வீடமைப்பு மந்திரியாகப் பதவியேற்றுள்ளனர். முன்னர் வீடமைப்புப்பகுதி, தொழில்-வேலைவசதி மந்திரி ஜனாப் எம்.எச். முகம்மதின் பொறுப்பில் இருந்தது. இதுவரை வர்த்தகமந்திரியாய் இருந்துவந்த டக்றர் எம்.வீ. பி.பீரிஸ் மஸ்கோவில் இலங்கைப்புதிய ஸ்தானிகராக நியமனஞ்செய்யப்படவிருக்கின்றார். அதனால் ஒரு செனற்றரான இவர் செனற்சபையிலும், மந்திரிசபையிலும் தமது பதவிகளை இராஜிநாமாச் செய்திருக்கின்றார்.

## வெற்றியளித்துள்ள உணவுப்பொருள் செய்கை

"இந்தநாட்டை உணவுசம்பந்தமாய்த் தன்னிறைவு அடையச்செய்வதே எமதுநோக்கம்; தேசிய அரசாங்கத்தின் உணவுப்பொருள் செய்கைத் திட்டம் வெற்றியளித்துள்ளது; இன்றுநாம் உபயோகிக்கும் உருளைக்கிழங்கு, வெங்காயம் என்பன உள்நாட்டிலேயே செய்கைபண்ணப்பட்டன; மற்றும் உணவுப்பொருள்களும் விரைவிலே நாட்டில்செய்கைபண்ணப்படும்; தட்டுப்பாடு இருக்கமாட்டாது; பொலநறுவையிலே கட்டிப்பால் உற்பத்தி செய்வது வருகிறபங்குனிமாதம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. நாடு பாலுணவுப் பொருட்களிலும் தன்னிறைவு காணும்காலம் வெகுதூரத்தில் இல்லை" என்று நகேகொடையில் நடைபெற்ற கூட்டம்ஒன்றில் பேசியபோது செனற்றர் ஜினதாசா கூறியிருக்கிறார்.


மின்சாரத்தில் இயங்கும்

சென்றிக்

நீர் இறைக்கும் இயந்திரங்களையும்

மண்ணெண்ணெயினால் இயங்கும்

சென்றிக்

யூனியர்—சீனியர்

பாரம் குறைந்த

நீர் இறைக்கும் இயந்திரங்களையும்

எமது பலதரப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்களுடன் அறிமுகப்படுத்துகிறோம்



ஒட்டோஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1968ஆம்ஆண்டு மாசிமீ 3-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org